**FIRST INFORMATION REPORT**

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS) ~~முதல் தகவல் அறிக்கை~~
(பா.நா.பா.ச.பிரிவு 173ன் படி) ~~(Under Section 154 Cr.P.C.)~~
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101994

1. District மாவட்டம் : மதுரை  PS: காவல்நிலையம் V&AC  Year ஆண்டு 2025  FIR No.: மு.த.அ. எண் 05/2025  Date: நாள் 24-4-2025

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended  Sections பிரிவுகள்: 7(a) of Pc Act 1988
   (ii) Act சட்டம்: by PC (Amendment)  Sections பிரிவுகள்: as amended by Pc
   (iii) Act சட்டம்: Act 2018  Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 1) 22-04-2025 at 11.30 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 2) 23-04-2025 at 12.45 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-04-2025  Time நேரம் : 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24-04-2025  Time நேரம் : 07.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  சுமார் 25 km தூரம் வலையங்குளம் கிராமம்
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. சுரேஷ்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கடங்கரைவேல்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1991  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கோழிப்பண்ணை  (g) Address : முகவரி 21, 5வது தெரு, பெரியசாமி நகர், அவனியாபுரம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. அன்புராஜ், பிர்கா சர்வேயர், வலையங்குளம் பிர்கா திருப்பரங்குன்றம் தாலுகா. மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது. பக்கம் 3 முதல் 7 வரை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/04/25 (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 24-4-25
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24-04-2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 08·35 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Madurai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 24.04.2025-ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை அவனியாபுரம் பெரியசாமி நகர் 5வது தெரு கதவு எண்.21-ல் வசிக்கும் கடற்கரைவேல் மகன் சுரேஷ் என்பவர் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் : K.சுரேஷ், த/பெ. கடற்கரைவேல், 21, 5வது தெரு, பெரியசாமி நகர், அவனியாபுரம், மதுரை. பெறுநர் : உயர்திரு. காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் அவனியாபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பி.இ. (EEE) படித்துள்ளேன். நான் கோழிப்பண்ணை வைத்து நடத்தி வருகின்றேன். நான் கடந்த 18.05.2023-ம் தேதியன்று தங்கமணி என்பவரிடமிருந்து எனது மனைவி லாவண்யா தேவி பெயரில் மதுரை, திருப்பரங்குன்றம் தாலுகா வலையங்குளம் கிராம ரீசர்வே எண். 87/3D1-ல் உள்ள சுமார் 40 செண்ட் புஞ்சை நிலத்தை விலைக்கு வாங்கி அதனை திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3256/2023 பிரகாரம் பதிவு செய்தேன். அங்கு கோழிப்பண்ணை வைத்து நடத்த உள்ளேன். எங்கள் நிலத்திற்கு அடுத்து வலையங்குளத்தை சேர்ந்த திரு.ஆறுமுகம் அவர்களின் மகன் திரு.திருப்பதி என்பவருக்கு வலையங்குளம் கிராம ரீசர்வே எண். 87/3C4-ல் 20 ½ செண்ட் புஞ்சை நிலம் உள்ளது. நான் எனது கோழி பண்ணையை விரிவுபடுத்து-வதற்காக திரு.திருப்பதி அவர்களின் 20 ½ செண்ட் நிலத்தில் 10.62 செண்ட் புஞ்சை நிலத்தை எனது மனைவி பெயரில் வாங்கிக்கொண்டு, எனது மனைவி பெயரில் உள்ள 40 செண்ட் நிலத்தில் 12.40 செண்ட் புஞ்சை நிலத்தை அவருக்கு கொடுப்பதாகவும், மேலும் இதற்காக அவர் எனது மனைவிக்கு ரூ.75,000/- பணம் கொடுப்பதாகவும் பேசி முடிவு செய்து அதனை கடந்த 05.07.2024-ம் தேதியன்று திருப்பரங்குன்றம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.4273/2024 பிரகாரம் பரிவர்த்தனை பத்திரமாக பதிவு செய்து அவ்வாறே நடந்து கொண்டோம். எனது மனைவி என்னிடம் கேட்டு கொண்டதின் பேரில், நான் கடந்த 15.04.2025-ம் தேதியன்று எனது செல்போன் மூலமாக ஆன்லைனில் எனது மனைவி பெயரில் வாங்கிய 10.62 செண்ட் நிலத்திற்கு உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து தர வேண்டி எனது பெயரில் விண்ணப்பித்தேன். அதற்காக ரூ.460/- பணம் ஆன்லைன் மூலமாக எனது Equitas வங்கி கணக்கிலிருந்து கட்டினேன். அதன் விண்ணப்ப எண்.2025/0105/24/721421 ஆகும். இந்நிலையில் கடந்த 22.04.2025-ம் தேதியன்று காலை சுமார் 07.30 மணிக்கு எனது செல்போன் எண்.7810891082-றக்கு செல்போன் எண்.9080155505 என்ற எண்ணிலிருந்து தொடர்புகொண்டு மிஸ்ட் கால் கொடுக்கப்பட்டது. அதன்காரணமாக நான் எனது செல்போன் எண்ணிலிருந்து அந்த செல்போன் எண்ணிற்க்கு தொடர்பு கொண்டு என்னை அறிமுகபடுத்திக்

கொண்டபோது எதிர்முனையில் பேசியவர் தான் திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலக பிர்கா சர்வேயர் திரு.அன்புராஜ் பேசுவதாக என்னிடம் தன்னை அறிமுகபடுத்திக்கொண்டு எனது பட்டா உட்பிரிவிற்காக விண்ணப்பித்த விண்ணப்பம் அவரிடம் வந்துள்ளது என்றும், அதுசம்பந்தமான ஆவணங்களின் நகல்களுடன் எனது இடத்தில் இருக்குமாறு கூறியும், அங்கு அவர் காலை சுமார் 11.00 மணிக்கு வருவதாக தெரிவித்தார். பின்பு நான் சுமார் 10.15 மணிக்கு எனது செல்போன் எண்ணிலிருந்து பிர்கா சர்வேயர் திரு.அன்புராஜ் அவர்களின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு, நான் ஆவணங்களின் நகல்களை எடுத்து வரும்போது FMB நகலும் எடுத்து வர வேண்டுமா எனக் கேட்டேன். அதற்கு அவர் ஆவணங்கள் மட்டும் போதும் FMB வேண்டாம் அது தன்னிடம் உள்ளது என்று கூறிவிட்டார். பின்பு நான் எனது இடம் சம்பந்தமான ஆவணங்களின் நகல்களை எடுத்துக்கொண்டு வலையங்குளத்தில் உள்ள எனது இடத்திற்கு சென்றுவிட்டேன். பிறகு காலை சுமார் 11.10 மணிக்கு நான் எனது செல்போன் எண்ணிலிருந்து பிர்கா சர்வேயர் திரு.அன்புராஜ் அவரது செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு நான் எனது இடத்தில் இருக்கும் தகவலை அவருக்கு தெரிவித்தேன். அப்போது அவர் தான் அருகில் வந்துவிட்டதாக தெரிவித்தார். பின்பு மீண்டும் சுமார் 11.15 மணிக்கு அவர் அவரது செல்போனிலிருந்து எனது செல்போன் எண்ணில் தொடர்புகொண்டு தான் எனது இடத்திற்கு அருகில் உள்ள தண்ணீர் கம்பெனி பக்கத்தில் உள்ளதாகவும், வாருங்கள் என தெரிவித்தார். எனது இருசக்கர வாகனத்தில் அங்கு சென்றேன். அங்கு இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த திரு.அன்புராஜ் அவர்களிடம் என்னை அறிமுகபடுத்தி கொண்டேன். அவர் தான்தான் வலையங்குளம் பிர்க்கா சர்வேயர் அன்புராஜ் எனக் கூறி எனது இடத்திற்கான ஆவணங்களின் நகல்களை என்னிடம் கேட்டார். நான் அவரிடம் தருவதாக கூறி, அவரை எங்களது இடத்திற்கு அழைத்து சென்றேன். அவர் எங்கள் இடத்தை பார்த்தார். அப்போது, அவர் எனது மனைவி லாவண்யாதேவி அவர்கள் பெயரில் பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திரம் ஆவண எண். 4273/2024-ன் நகல் மற்றும் அந்த இடத்தின் தாய்ப்பத்திரம் ஆவண எண்.167/2015-ன் நகல் ஆகியவற்றை என்னிடம் இருந்து கேட்டுப்பெற்றார். பிறகு, அப்பத்திர நகல்களை பார்த்துவிட்டு, என்னிடம் உங்களுடைய இடத்திற்கான உட்பிரிவு பட்டா வழங்க தான் சிபாரிசு செய்து அதனை விரைந்து கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதற்கு அவருக்கு ரூ.5,000/- வேண்டும் என அப்போது கேட்டார். நான் அவரிடம் இது அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையா எனக் கேட்டேன். அதற்கு அவர் இல்லை அது அவரது செலவிற்கு கொடுக்க வேண்டிய பணம் எனக் கூறினார். நான் அவரிடம் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை எனக் கூறினேன். அதற்கு அவர் நீங்கள் பணத்தை தயார் செய்துவிட்டு என்னிடம் செல்போனில் சொல்லுங்கள் எனக் கூறிவிட்டு, மேலும், எனது இடத்திற்கான திருப்பதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகலையும் கொண்டு வருமாறு கூறிவிட்டு சென்று விட்டார். பின்பு, பிர்க்கா சர்வேயர் அன்புராஜ் அவர்கள் கடந்த

22.04.2025-ம் தேதியே மதியம் சுமார் 02.00 மணிக்கு, எனது செல்போன் எண்ணிற்கு அழைத்திருந்தார். நான் அதனை கவனிக்கவில்லை. பிறகு, அதனை பார்த்துவிட்டு, எனது செல்போனிலிருந்து, பிர்க்கா சர்வேயர் அன்புராஜ் அவர்களின் செல்போனிற்கு மதியம் சுமார் 03.25 மணிக்கு தொடர்பு கொண்டு பேசிய போது, அவர் என்னிடம், நாளை மதியம் அவரை செல்போனில் அழைக்குமாறு கூறி, அப்பொழுது நான் அவரை எங்கு வந்து சந்திக்க வேண்டும் என்பதை கூறுவதாக தெரிவித்தார். நானும் சரி என்றேன். நேற்று (23.04.2025) மதியம் சுமார் 12.10 மணிக்கு எனது செல்போனிலிருந்து, பிர்க்கா சர்வேயர் அன்புராஜ் அவர்களின் செல்போனிற்கு தொடர்பு கொண்டு பேசிய போது, அவர் வலையன்குளம் டோல்கேட் தாண்டி உள்ள MDS பேக்கரி பக்கம் உள்ள இடத்தில் அளவை செய்து கொண்டிருப்பதாகவும், அந்த பேக்கரிக்கு அருகில் வந்து தன்னிடம் செல்போனில் பேசிவிட்டு தன்னை சந்திக்குமாறு கூறினார். உடனே, நான் வலையன்குளம் டோல்கேட் தாண்டி உள்ள MDS பேக்கரி அருகே சுமார் 12.40 மணிக்கு சென்று, திரு. அன்புராஜ் அவர்கள் கூறியபடி எனது செல்போனிலிருந்து அவரது செல்போனில் தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் எனது இடத்திற்கு செல்லும் வழியில் உள்ள தண்ணீர் கம்பெனிக்கு அருகில் வருமாறு கூறினார். அதன் படி நான் அங்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். அங்கு, திரு. அன்புராஜ் அவர்கள் தனது இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் என்னிடம், ஏற்கனவே கேட்டிருந்த எனது இடத்திற்கான திருப்பதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவண எண். 4266/2024-ன் நகலை அவரிடம் கொடுத்தேன். அதனை என்னிடமிருந்து வாங்கி பார்வையிட்ட பின்பு, உங்கள் மனைவி லாவண்யாதேவி பெயரில் உட்பிரிவு பட்டா வழங்க சிபாரிசு செய்வதற்காக நான் கேட்ட பணம் ரூ.5,000/- என்னாச்சு என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் கோழிப்பண்ணைக்கு அதிகமாக செலவாகி விட்டது. தற்போது என்னிடம் பணம் ஏதும் இல்லை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என சொன்னேன். அதற்கு பிர்க்கா சர்வேயர் அன்புராஜ் அவர்கள் என்னிடம், நான் வழக்கமாக வாங்குவதுதான், நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொடுத்தால்தான் உங்கள் மனைவி லாவண்யாதேவி பெயரில் உட்பிரிவு பட்டா வழங்க சிபாரிசு செய்து சிக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும். இல்லையென்றால், எனக்கு நிறைய வேலையிருக்கிறது, நீங்கள் அலைந்து கொண்டேதான் இருக்க வேண்டும் என்று கோபமாக கூறினார். மேலும், அவர் என்னிடம், தான் நாளை 24.04.2025-ம் தேதி காலை வலையங்குளம் அருகில் உள்ள இடத்தில்தான் அத்துமால் அளவீடு செய்ய இருப்பதாகவும், எனவே நாளை காலையில் தன்னிடம் செல்போனில் பேசிவிட்டு, தான் சொல்லும் இடத்திற்கு வந்து பணம் ரூ.5,000/-த்தை கொடுத்து உங்கள் வேலையை முடித்துகொள்ளுங்கள் என கண்டிப்பாக சொன்னார். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு இலஞ்சம் கொடுப்பதற்கு விருப்பமில்லை. எனது மனைவி லாவண்யாதேவியிடம் நமது இடத்திற்கு உட்பிரிவு பட்டா வழங்குவதற்கு பிர்கா சர்வேயர் அன்புராஜ் ரூ.5,000/- இலஞ்சம் கேட்பதை தெரிவித்தேன். அதற்கு

அவர், அரசு வேலையை செய்வதற்கு நம்மிடம் போய் லஞ்சம் கேட்கிறாரே எனக் கூறி மிகவும் வருத்தப்பட்டார். எங்களுக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுத்து உட்பிரிவு பட்டா பெறுவதற்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்கும் திருப்பரங்குன்றம் தாலுகா வலையங்குளம் பிர்க்கா சர்வேயராக பணிபுரியும் திரு.அன்புராஜ் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன் சர்வேயரிடம் கொடுத்த, எனது மனைவி லாவண்யாதேவி பெயரில் உள்ள பரிவர்த்தனை பத்திரம் ஆவண எண். 4273/2024, அந்த இடத்தின் தாய்ப்பத்திரம் ஆவண எண்.167/2015 மற்றும் தான செட்டில்-மெண்ட் ஆவண எண். 4266/2024 மற்றும் இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் எண்.2025/0105/24/721421 நாள் : 15.04.2025 ஆகியவற்றின் நகல்களை இணைத்து உள்ளேன். மேலும் பிர்கா சர்வேயர் திரு.அன்புராஜ் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX K. Suresh 24/04/25.

**Sir, Received the typed complaint today 24-04-2025 at 07.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the Accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, V&AC, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 05/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (N. Bharathipriya) 24-04-25 Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. K. Suresh, S/o. Kadarkaraivel, 21, 5$^{th}$ Street, Periyasamy Nagar, Avaniyapuram, Madurai along with the copy of (1) Thirupparankundram Sub Registrar Office Doc. No.4273/2024 in the name of Tmt. Lavanyadevi, (2) Madurai South Joint No. I Sub Registrar Office Parent Document in Doc. No.167/2015, (3) Thirupparan-kundram Sub Registrar Office Dhanam Settlement Doc. No.4266/2024 and (4) Online Patta Name Transfer Application No.2025/0105/24/721421 Dated : 15.04.2025 are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of**

**cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

**(N. Bharathipriya)**
**Inspector of Police,**
**Vigilance & Anti Corruption,**
**Madurai.**
**(24.04.2025)**